முருகப்பெருமான் துணை

**மகான் நந்தனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.12.2022, திங்கட்கிழமை

1. யோகராஜனே அரங்கா வாழ்க
யோகியர்கள் துணை கொண்ட
யுகமாற்றம் தரவந்த தேசிகனே
உன்பெருமை கூறி இனிதே
2. இனிதே அனுகூல ஆசிதனை
இன்னலிலா சுபகிருது தேள்திங்கள்
கனிவுடன் இருபானாற் திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 26 ம் நாள் 12.12.2022, திங்கட்கிழமை)
கண்டுரைப்பேன் நந்தனார் யானும்
3. யானும் உலகநலம் பெற வேண்டி
உரைப்பேன் அரங்க ஞானி கேட்க
ஞானக்குடில் படைத்து அருளும்
ஞானியரின் சொல் செயல் அனைத்தும்
4. அனைத்தும் வேதமாக வருக
அகிலத்தார் அனுகி வந்து
துணையாக நின்று இனிதே
தொண்டாற்றி பூசைகள் செய்து
5. செய்துமே அன்னதானமெனும்
சிறப்பான சேவையை வளர்த்து
மெய்ஞானம் பயின்று வர
மேலவர்கள் ஆசி துணை வந்து
6. வந்துமே சகல இடர்களையும்
வல்லமைபட களையும் திறனும்
சிந்தைவழி எந்த தாழ்வுமிலா
சித்தமும் திடமும் கூடி நன்கு
7. கூடியே உலகை மாற்றும்
குறைவிலா விந்தை பலமும்
நாடியே உலகோர் சிறப்பர்
ஞானிகளை வணங்கி வணங்கியே
8. வணங்கியே ஞானிகள் ஆகும்
வாய்ப்பும் வல்லமையும் அடைவர்
இணங்கி ஓங்காரக் குடிலில்
இணைந்து கலந்து வருக
9. வருகவே உலகமாற்றம் செய்யும்
வாய்ப்பில் பங்களிப்பாகி
முருகப்பெருமான் அருளும் தயவும்
முழுமை ஞானமும் கண்டுமே

10. கண்டுமே கலியுகமக்கள்
கந்தப்பெருமான் அனுமதியோடு
தொண்டர்களாகத் தொடர்ந்து
தெய்வபலம் கூடி ஞானிகளாவர்

11. ஆகவே ஞானிகள் ஆட்சி
அரங்கமகான் அவதார நோக்கம்
செகத்தில் நிறைவேறி வெற்றிகாணும்
செப்பிவந்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–